**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4261/ஆ5/2024, நாள். 25.10.2024**

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – இந்து தமிழ் இசை நாளிதழ் சார்பாக பள்ளிகளில் சுகாதார விழிப்புணர்வு தொடர்பான வண்ணம் தீட்டுதல் மற்றும் கட்டுரை போட்டிகள் நடத்திட அனுமதி அளித்தல் – தொடர்பாக |
| பார்வை | சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.067011/எம்2/ இ3/2024, நாள். 22.10.2024 |

.....

இந்து தமிழ் திசை நாளிதழ் சார்பில் கடந்த 11 ஆண்டுகளாகத் தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்கான பல்வேறு முன்னெடுப்புகளை பள்ளி அளவில் நடத்தி வருவதாகவும், பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளிடம் தன்சுத்தம் தொடர்பான சுகாதார விழிப்புணர்வு கருத்துக்களை உண்டாக்கும் நோக்கில் 3,4,5 ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு வண்ணம் தீட்டுதல் போட்டியும் 6 முதல் 8ஆம் வகுப்பு படிக்கும் மாணவ / மாணவியர்களுக்கு ஜூனியர் பிரிவு கட்டுரைப் போட்டியும் 9 முதல் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவ / மாணவியர்களுக்கு சீனியர் பிரிவு கட்டுரைப் போட்டியும் சென்ற ஆண்டு நடத்தியதாகவும், அதே போல் இந்த ஆண்டும் சுகாதார விழிப்புணர்வு போட்டிகளை நடத்திட உள்ளதாகவும், மேலும் மாணவர்களுக்கு தன் சுத்தம் குறித்த சுகாதார கருத்துக்களை உள்ளடக்கியது என்றும் இதில் யாரும் கருத்தாளராகப் பங்கேற்று பேசுவதில்லை எனவும் மாணவ / மாணவியர்களே சுத்தமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை அறிந்துகொள்ளும் வகையில் வண்ணம் தீட்டுதல் மற்றும் கட்டுரை போட்டிகள் நடத்தப்பட உள்ளதாகவும், அதற்கான அனுமதி பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி வழங்கப்பட்டுள்ளது.

எனவே பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளிடம் தன்சுத்தம் தொடர்பான சுகாதார விழிப்புணர்வு கருத்துக்களை உண்டாக்கும் நோக்கில் இந்து தமிழ் திசை நாளிதழ் சார்பில் 3,4,5 ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு வண்ணம் தீட்டுதல் போட்டியும் 6 முதல் 8 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ / மாணவியர்களுக்கு ஜூனியர் பிரிவு கட்டுரைப் போட்டியும் 9 முதல் 12ஆம் வகுப்பு படிக்கும் மாணவ / மாணவியர்களுக்கு சீனியர் பிரிவு கட்டுரைப் போட்டியும் பள்ளி அளவில் நடத்திட இந்து தமிழ் திசை நாளிதழ் சார்பில் பள்ளிகளை அணுகும்போது அனுமதி வழங்கிட தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – பார்வையின் செயல்முறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல்–

1. சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநர்
   அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர்கள் ,
   அனைத்து தொடக்க / நடுநிலை /உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)